DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No. 06/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சதீஸ்குமார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சுப்பிரமணியன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 25.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை:</u>

1. நான் பனங்காட்டான்வயலில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். 1ம் எதிரி என் மனைவி. 2 ம் எதிரி என் பெரியப்பா மகன். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு 1ம் எதிரியுடம் திருமணம் ஆகி எனக்கு 2 குழந்தைகள் உள்ளார்கள். அப்போது 2ம் எதிரி சிங்கப்பூரில் இருந்தார். 2ம் எதிரிக்கும் என் மனைவி 1ம் எதிரிக்கும் போன் மூலம் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்துவிட்டு பிரிந்து அவர் அவர் வீட்டிற்கு வந்துவிட்டோம்.

2. நான் என் வீட்டில் இருந்தேன். 1ம் எதிரி ஆவுடையார்கோவிலில் இருந்தார். 1 மாதம் கழித்து 19.09.2023 ம் தேதி மதியம் 2

மணியளவில் 1ம் எதிரி எனக்கு போன் செய்து விவாகரத்து கேட்டு தேவிடியா மகனே, சுண்ணி மகனே,கோத்தா கொம்மா என்று அசிங்கமாக பேசி எனக்கு விவாகரத்து தரமாட்டியா உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். ஆள் வைத்து வெட்டிவிடுவோம் என்று 1, 2 எதிரிகள் இருவரும் whatsapp காலில் மிரட்டினார்கள்.

3. நான் என் வீட்டில் வந்து சொன்னேன். பின்பு வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் காவல் நிலையத்தில் என்ன தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 18.10.2023ம் தேதி புகார் கொடுத்தேன். எதனால் 1 மாதம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் முதலில் புகார் கொடுத்தபோது காவல் நிலையத்தில் எடுத்துக்கொள்ளவில்லை, பின்பு ஆதாரங்களை கொடுத்தபின்புதான் புகாரை பெற்றார்கள். முதலில் புகார் கொடுத்த தேதி என்ன என்றால் தேதி நினைவில்லை, எதிரிகள் போன் செய்து மிரட்டியதில் இருந்து 1 வாரம், 10 நாட்கள் இருக்கும். எதிரிகள் போன் செய்து பேசிய போது எனக்கு மட்டும்தான் தெரியும் என்றால் சரிதான்.

2. நான் புகாரில் ஒரு சிங்கப்பூர் என்னையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம், வாட்ஸ்அப் கால் அதிலிருந்துதான் வந்தது. சிங்கப்பூர் எண்ணில் இருந்து மட்டும்தான் மிரட்டல் வந்ததா என்றால், நான் சிங்கப்பூர்

எண்ணிலிருந்து வந்த காலை மட்டும்தான் பதிவு செய்ய முடிந்தது, மற்றொரு நம்பரில் இருந்து வந்த காலை என்னால் ரெக்கார்ட் செய்ய முடியவில்லை. என் மனைவி சிங்கப்பூர் எண்ணில் இருந்து பேச முடியாது என்றால் சரியல்ல, அப்போது எதிரிகள் இருவருமே ஆவுடையார்கோவிலில்தான் இருந்தார்கள். ஒருவேளை 2 பேரும் ஒரே இடத்தில் இருந்திருந்தால் ஏன் 2 நம்பரில் இருந்து தனித்தனியாக மிரட்ட வேண்டும் என்றால் சிங்கப்பூர் நம்பரில் இருந்து மட்டும்தான் 19.09.2023 ம் தேதி எனக்கு மிரட்டல் வந்தது, அதற்கு முன்பு மற்றொரு நம்பரில் இருந்து மிரட்டல் வந்தது, ஆனால் அதை ரெக்கார்ட் செய்ய முடியவில்லை.

3. என்னை யாரும் மிரட்டவில்லை என்றும் அப்படி மிரட்டி இருந்திருந்தால் போலீசார் நான் பதிவு செய்ததை ஆவணமாக தாக்கல் செய்திருப்பார்கள் என்றும் நான் அவ்வாறு எதுவும் பதிவு செய்யவில்லை என்றும் செய்திருந்தால் போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் மனைவிக்கு தொந்தரவு கொடுக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டவில்லை என்றும் கொலை மிரட்டல் எதுவும் செய்யவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.